04.02.2025

OS No: 126/2021

பி.வா.சா. 1 திருமதி. தமிழ் , க/பெ. முனியாண்டி

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாதியை தெரியுமா என்றால் தெரியும். வாதியை எப்போது தெரியும் என்றால் கிரைய ஒப்பந்தம் போட்ட காலத்தில் தெரியும். வா.சா.ஆ.1ல் கண்டுள்ள தமிழ் என்ற கையெழுத்து அனைத்தும் என்னுடையது தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் கண்டுள்ள கையெழுத்துக்களை மேற்படி வா.சா.ஆ.1 எழுதப்பட்ட தேதியன்று போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் கண்டுள்ள ராதாகிருஷ்ணன் எனது மருமகன் என்றால் சரிதான். 2வது சாட்சி அழகுசுந்தரம் எனது மகன் என்றால் சரிதான். தாவா வழக்குச் சொத்து எனக்குப் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி வழக்குச் சொத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்குச் சொத்து சுமார் 8 செண்ட் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா,ஆ.1 பத்திரம் நானும், எனது மகன், மருமகன் ஆகிய மூவரும் சேர்ந்து தான் வா.சா.ஆ.1 பத்திரம் எழுத வேண்டுமென பேசிக்கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பத்திரம் எழுதுவதற்கு முன்பே எனது மகனுக்கும், மருமகனுக்கும் தெரியும் என்றால் இல்லை. நானும், எனது மகனும், எனது மருமகனும் சேர்ந்துதான் வாதிக்கு சொத்தை கிரையம் பேசி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுத்தோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கண்ட சொத்தை ரூ.2,50,000/-ற்கு கிரையம் பேசி மேற்படி பத்திரம் எழுதப்பட்ட தேதியன்று ரூ.2 லட்சத்தை கிரைய முன் தொகையாக பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்ட அன்று நான் ரூ.2 லட்சத்தை பெற்றுக்கொண்டேன் என்றால் இல்லை, ரூ.1,75,000/-ஐ வட்டிக்கு கடனாக பெற்றதற்கு வா.சா.ஆ.1 ஆவணத்தை வாதி எழுதிக்கொண்டார். வட்டிக்காக வா.சா.ஆ.1 எழுதப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.,ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் பாக்கி ரூ.50,000/- ஒன்றரை வருட காலத்திற்குள் பெற்றுக்கொண்டு கிரையம் ஏற்படுத்தி கொடுக்கவேண்டுமென பேசிக்கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.,1 பத்திரத்தை எழுதியவர் சோ.மாதவன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பத்திரம் எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என தெரியுமா என்றால் தெரியாது, படிப்பறிவு இல்லாததால் எத்தனை மணிக்கு வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1

ஆவணத்தை எனது மகன் படித்துப்பார்க்காமல் கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனது மகன் சாயங்காலம் தான் கையெழுத்து செய்தார். வா.சா.ஆ.1 ஆவணத்தை எனது மகன் மற்றும் மருமகன் படித்துப்பார்த்து தான் கையெழுத்து செய்தார்கள் என்றால் சரியல்ல. எனது மகன் மற்றும் மருமகன் ஆகியோரில் யார் முதலில் வந்து கையெழுத்து செய்தனர் என்றால் இருவரும் சாயங்காலம் தான் வந்து கையெழுத்து செய்தார்கள். எனது நிருபணவாக்குமூலத்தில் மருமகன் எப்போது வந்து கையெழுத்து செய்தார் என விபரம் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் கடனுக்காக ஏற்படுத்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 அறிவிப்பு வாதி தரப்பால் எனக்கு அனுப்பப்பட்டது என்றால் இல்லை. எதிர்வழக்குரை மற்றும் நிருபணவாக்குமூலத்தில் வா.சா.ஆ.2 அறிவிப்பு எனக்கு அனுப்பப்பட்டதாக சங்கதி உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அறிவிப்பு கிடைத்த பின்பு நேரடியாக நான் சென்று வாதியிடம் கிரைய ஒப்பந்தம் எழுதி தரவில்லை என்றும், அடமான பத்திரம் தான் எழுதி தந்ததாக தெரிவித்தேன் என்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையிலும் மற்றும் நிருபணவாக்குமூலத்திலும் நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என விபரம் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா,ஆ.2 அறிவிப்பிற்கு நான் பதில் அனுப்பவில்லை என்றால் சரியல்ல நான் பதில் அனுப்பியுள்ளேன். வாதி வட்டிக்குப் பணம் கொடுத்தார் என நான் சொல்வதற்கு ஆவணம் உள்ளதா என்றால் எனது மகனிடம் உள்ளது. மேற்படி ஆவணத்தை தற்போது தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும், எனது மகனும் எந்த காலத்திலும் வட்டி தரவில்லை என்றால் சரியல்ல. நான் 2 வருடங்களாக வட்டி செலுத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையிலும் மற்றும் நிருபணவாக்குமூலத்திலும் நான் ரூ.1,75,000/- பெற்றேன் என்றும் ரூ.2லட்சம் பெறவில்லை என்றும் விபரம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரை பத்தி 6ல் ரூ.2லட்சம் கடனாக பெற்றேன் என்பதாக சங்கதி உள்ளது என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்டுள்ள ரூ.2 லட்சம் கடனுக்காக வாங்கியது அல்ல என்றும் வா.சா.ஆ.1 பத்திரத்திற்கான முன் தொகை என்றால் சரியல்ல.எனது மகன் சாயங்காலம் வந்து படிக்காமல் கையெழுத்து செய்ததாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. வா.சா.,ஆ.1 கிரைய உடன்படிக்கை எழுது கொடுத்துவிட்டு தற்போது

வழக்கிற்காக கடனுக்காக எழுதி கொடுத்த ஆவணம் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிராது பரிகாரத்தை நிலைநிறுத்த எனக்கு கடமையுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

R PANDY

Digitally signed by R PANDY
Date: 2025.02.04 17:30:46 +0530